DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.273/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 15.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், வேலுார் போக்குவரத்து காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் கடந்த 05.02.2025ம் தேதி நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் பணியாற்றியபோது காவல் உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் அவர்களின் தலைமையில் நானும் தலைமை காவலர் திரு.விஜயக்குமார் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் 16.00 மணியளவில் எருமப்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பொட்டிரெட்டிப்பட்டி கெஜக்கோம்பை செந்தில் என்பவரது காட்டில் கண்காணித்தபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் ஒரு சிறிய பச்சை குடத்துடன் நின்று கொண்டிருந்தார். அவர்தான் ஆஜர் எதிரி **(**சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்**.)**

ஆஜர் எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் செல்வகுமார் த.பெ.செல்லப்பநாடார் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக கள்

இறக்கியதாகவும் தான் வைத்திருக்கும் பச்சை நிற குடத்தில் கள் இருப்பதாகவும் கூறினார். ஆஜர் எதிரி தான் வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள பச்சை நிற குடத்தை ஆய்வு செய்தபோது அதில் 2 லிட்டர் அளவு கள் இருந்தது. ஆஜர் எதிரி அந்த கள்ளை விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார். எதிரி செல்வகுமார் அவர் வைத்திருந்த குடத்தில் இருந்த கள்ளுடன் காவல் உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் அவர் எனது செல்போனில் புகைப்படம் எடுத்தார்.

பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் 16.15 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைது செய்தார். பின்னர் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உதவி ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.விஜயகுமார் மற்றும் எனது முன்னிலையில் பதிவு செய்தார்.

ஆஜர் எதிரி செல்வகுமார் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் பொட்டிரெட்டிப்பட்டியை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள பச்சை நிற குடத்தில் இருந்த 2 லிட்டர் கள்ளை அஜர் செய்தார். அதை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழிக்கப்பட்டது. அழித்தல் மகஜருடன் கூடிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**அழித்தல் மகஜருடன் கூடிய கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்னர் ஆஜர் எதிரி மற்றும் அவர் வைத்திருந்த கள்ளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.25/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். காவல் உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் வழக்கை தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்**.**

பின்னர் 06.05.2025ம் தேதி உதவி ஆய்வாளர் உடன் நானும் தலைமை காவலர்

திரு.விஜயகுமார் சம்பவ இடம் சென்றோம். காலை 08.00 மணிக்கு உதவி ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி சம்பவ இடமானது யாருக்கு சொந்தமான இடம் என்று விசாரணையில் தெரிந்து கொண்டோமா என்றால் செல்வம் என்பவருக்கு சொந்தமான இடம் என்று தெரிந்துகொண்டோம். மேற்படி செல்வம் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி செல்வம் என்பவருக்கும் ஆஜர் எதிரிக்கும் என்ன உறவு என்று நான் எனது விசாரணையில் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி செல்வம் என்பவர் என்னிடம் அவருக்கு சொந்தமான நிலத்தில் ஆஜர் எதிரியோ அல்லது வேறு நபரோ கள் இறக்குகிறார்கள் என்று தகவல் தெரிவித்தார்களா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல ஆய்வாளர் எதிரியிடம் தெரிவித்தார். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் கள்ளை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கள்ளை விற்றார் என சொல்லப்படும்நிலையில் எதரியிடம் இருந்து பணம் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. எதிரி கள்ளை வைத்திருந்ததாக கூறப்படும் ஆரஞ்சு நிற பிளாஸ்டிக் குடத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். கள்ளை தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் அழிக்கவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளின் மாதிரியை கைப்பற்றப்பட்ட பொருள் கள்தானா என்று நிரூபிக்கும் பொருட்டு ஆய்விற்காக எடுக்கவில்லை என்றால் சரிதான். நானும் மற்ற சாட்சியான செல்வம் ஆகியோர்தான் எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் சரிதான். எதிரியை எங்களது காவலில் வைத்துதான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளை எங்களது முன்னிலையில் அழிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து கள் கைப்பற்றப்படவில்லை

என்றாலும் எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**